1994 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 85, திரு. சஞ்சய் ராமசாமி, இருக்கையில் இல்லை; அவருக்குப் பதிலாக திரு. இரா. தாமரைக்கனி கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

85—

விருதுநகர்—மதுரை வழித்தடத்தில் பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இயக்குதல்

***35632—திரு. சஞ்சய் ராமசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைளிப்பாரா—

(அ) விருதுநகரிலிருந்து மதுரைக்கு இயக்கப்பட்ட பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளின் வழித்தடம் நீட்டிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் மதுரை செல்ல சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், வழித்தடத்தைக் குறுக்கி மீண்டும் விருதுநகரிலிருந்து மதுரைக்குப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் மதுரை-விருதுநகர் என்று இயக்கப்பட்டு வந்த சில பேருந்துகள் தற்போது கோவில்பட்டிவரை நீட்டித்து இயக்கப்படுகிறது. இதனால் பயணிகளுக்கு சிரமம் ஏற்படாவண்ணம் நாள் ஒன்றுக்கு 680 தனி நடைகள் மதுரையிலிருந்து விருதுநகர் வழியாக இயக்கப்படுகின்றன. இதுவே போதுமானதாகும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர், மாவட்டத்தின் தலைநகராக இருக்கிற காரணத்தினால், விருதுநகரிலிருந்து மதுரைக்குப் போவதற்கு பஸ்கள் போதுமானதாக இருந்தாலும், இன்னும் அதிக பஸ்கள் விடப்படுமா? இப்போது, பஸ்கள் பழைய பேருந்து நிலையத்திலிருந்து போகின்றனவா, புதிய பேருந்து நிலையத்திலிருந்து போகின்றனவா என்று தெரியவில்லை. புதிய பேருந்து நிலையத்திலிருந்து அவை செல்லுமாறு, போக்குவரத்துத் துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட

எஸ்.பி. ஆகியோர் ஆணை பிறப்பித்தும், பி.ஆர்.சி. பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் அங்கு நிற்பதாக ரெகார்டு செய்து கொண்டு, அங்கு நிற்பதே இல்லை. ஆகவே அவை அங்கு நிற்பதற்கும், முன்னாள் நகரசபைத் தலைவர், ஒரு கோடி ரூபாய் செலவில் அந்தப் புதிய பஸ் ஸ்டாண்டை அமைத்து, அது பொதுமக்களுக்குப் பிரயோசனப்படாமல் இருக்கிறது; அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் .(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விருதுநகரிலிருந்து பஸ் போவது பற்றியது கேள்வி. அதுகுறித்துக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: பஸ் ஸ்டாண்டு செயல்படுத்தப்படாமல் இருக்கிறதே; மக்களுடைய வரிப் பணம் வீணாகப் போகிறதே என்பதற்காக, அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி, கூடுதலாக அவ்வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கப்படுமா என்று கேட்டார்கள். கூடுதலாகத் தேவைப்படுமென்று மக்கள் கருதினால், கூடுதலாகவே 2 பேருந்துகள் ஒரு வாரத்திற்குள் அந்தப் பகுதியிலே இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் மற்றொரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். புதிய பேருந்து நிலையத்தில் அவை நிறுத்தப்படுகின்றனவா, பழைய பேருந்து நிலையத்தில் நிறுத்தப்படுகின்றனவா என்று கேட்டிருக்கிறார்கள். அதிலே பல்வேறு சிக்கல்கள் இருக்கிற காரணத்தினால். தடை வாங்கி இருக்கிறார்கள். அதன்மீது பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது குறித்து தனிக் கேள்விப் போட்டால், அதற்கு விளக்கமாகப் பதில் அளிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 86, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

86—

அரியூர் பஞ்சாலையை இலாபகரமாக இயக்க நடவடிக்கை

***33710*—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—